மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 19

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

தரம்: 11

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. அருமந்த உணவு வீணாகிவிட்டதே. என்ற வாக்கியத்தில் அருமந்த என்பது
   - i. இலக்கணமுடையது
   - ii. மங்கலம்
   - iii மரூஉ
   - iv இடக்கரடக்கல்
2. பொன்கொடுதீவை புங்குடுதீவு என்று அழைப்பது
   - i. மரூஉ
   - ii. இடக்கரடக்கல்
   - iii இலக்கணமுடையது
   - iv மங்கலம்
3. மரூஉ ஆக அமையாத சொல்
   - i. நல்லை
   - ii. சுதி
   - iii சந்நிதி
   - iv நல்லபாம்பு
4. மலங்கழுவி வந்தான் என்பதை கால் கழுவி வந்தான் என்று நாகரிகமாக கூறவைப்பது,
   - i. மரூஉ
   - ii. மங்கலம்
   - iii இடக்கரடக்கல்
   - iv இலக்கணமுடையது
5. “நல்லபாம்பு தீண்டாது விரைந்து சென்றது” என்பதில் நல்லபாம்பு என்பது
   - i. மங்கலம்
   - ii. இடக்கரடக்கல்
   - iii மரூஉ
   - iv இலக்கணமுடையது

பகுதி 2

1) “சிந்தூர திலக நுதல் சிந்துரத்தின் மருப்பு ஒசித்த செங்கண்மாலே”
   1. இங்கு யாருடைய சிறப்பு, எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
   2. சிந்தூரம், சிந்துரம் என்பவற்றின் பொருளை கூறுக.

2) “நாத் தோம் இல் உரை பதற கதும் என உற்று எழுந்து இறைஞ்சி ஞாலம் எலாம் பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர் மணி மார்மா புன்மை யாவும் தீர்த்தோனே”
   1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   2. தோம் இல் என்பதன் பொருள் யாது?
   3. கிருட்டினன் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

3) “ஊனம் இலான் மானமிலாது உரைப்பதற்கு என் செய்வது”
   1. ஊனம் இலான் என்று குறிக்கப்படுபவர் யார்?
   2. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

4) “அரவுயர்ந்தோன் கொடுமையிலும் முரசுயர்ந்தோய் உனது அருளுக்கு அஞ்சினேனே”
   1. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   2. அரவுயர்ந்தோன், முரசுயர்ந்தோன் என குறிக்கப்படுபர் யார்?

5) “கான் ஆள உனை விடுத்த கண்ணிலா அருளிலி தன் காதல் மைந்தன்”
   1. கண்ணிலா அருளிலி என குறிப்பிடப்படுபவன் யார்?
   2. அவ்வாறு அருளிலி என குறிப்பிடப்பட காரணம் யாது?
   3. காதல் மைந்தன் என குறிப்பிடப்படுவர் யார்?